# EASTERN UNIVERSITY, SRI LANKA
# FACULTY OF COMMERCE & MANAGEMENT
## FIRST EXAMINATION IN BBA / COM 2000/2001 (REPEAT) (JUNE 2007)
## BBA / COM 101 MICRO ECONOMICS

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடை தருக. நேரம் : 03 மணித்தியாலங்கள்

01. (அ) குறுங்கால உற்பத்தித் தொழிற்பாட்டையும் நீண்டகால உற்பத்தித் தொழிற்பாட்டையும் வேறுபடுத்துக.
(08 புள்ளிகள்)

(ஆ) குறையும் எல்லை விளைவு விதியை வரைபடங்களுடன் விளக்குக.
(12 புள்ளிகள்)

02. (அ) சமநோக்கு கோடுகளின் பிரதான இயல்புகளைத் தருக.
(08 புள்ளிகள்)

(ஆ) சமநோக்குக் கோடுகளைப் பயன்படுத்தி நுகர்வோன் சமநிலையை எவ்வாறு விளக்குவீர்?
(12 புள்ளிகள்)

03. (அ) நிலையான செலவுகளையும் மாறும் செலவுகளையும் உதாரணம் தந்து வேறுபடுத்துக.
(08 புள்ளிகள்)

(ஆ) குறுங்கால சராசரி, எல்லைச செலவுக் கோடுகளை வரைந்து அவற்றின் வடிவங்களுக்கான காரணங்களை விளக்குக.
(12 புள்ளிகள்)

04. வரைபடங்களின் உதவியுடன் பின்வரும் கூற்றுக்களை விளக்குக.

(அ) "நிறைபோட்டி நிறுவனம் ஒன்றின் சராசரி மற்றும் எல்லை வருமானக் கோடுகள் கிடை அச்சுக்குச் சமாந்தரமாக அமைந்திருக்கும்".

(ஆ) "ஒரு நிறைபோட்டி நிறுவனம் விலையை ஏற்பவனாக (price taker) மட்டுமே செயற்படமுடியும்".

(இ) "ஒரு போட்டி உற்பத்தியாளன் தனது இலாப நட்டங்களைக் கணக்கிடும்போது சராசரிச் செலவினைக் கருத்தில் எடுக்கின்றான்."

(ஈ) "நீண்டகால சமநிலையின்போது ஒரு நிறைபோட்டி நிறுவனம் சாதாரண இலாப நிலைமையையே அநுபவிக்கும்."
(5 X 4 = 20 புள்ளிகள்)

2-1

05. (அ) மரபு ரீதியான செலவுக் கோட்பாட்டினைவிட நவீன செலவுக் கோட்பாடு ஏன் சிறந்தது? காரணம் கூறி விளக்குக.

(12 புள்ளிகள்)

(ஆ) நவீன செலவுக் கோட்பாட்டின்படி நீண்டகால செலவுக் கோடுகள் ஏன் “ட” வடிவில் அமைந்திருக்கின்றன?

(08 புள்ளிகள்)

06. (அ) தனியுரிமை தோன்றுவதற்கு ஏதுவான காரணிகள் யாவை?

(08 புள்ளிகள்)

(ஆ) தனியுரிமையாளனால் செயற்படுத்தப்படும் விலை பேதப்படுத்தலின் மூன்று நிலைகளையும் விளக்குக.

(12 புள்ளிகள்)

07. (அ) தனியுரிமைப் போட்டியின் சிறப்பியல்புகளை விளக்குக.

(08 புள்ளிகள்)

(ஆ) இலங்கையில் இன்று காணப்படும் சில தனியுரிமைப் போட்டி நிறுவனங்களையும், அவற்றின் உற்பத்திகளையும் குறிப்பிடுக.

(04 புள்ளிகள்)

(இ) தனியுரிமைப் போட்டி நிறுவனங்கள் ஏன் விளம்பரங்களில் அதிக பணம் செலவிடுகின்றன?

(08 புள்ளிகள்)

08. பின்வருவனவற்றுள் மூன்றுக்கு சிறு குறிப்பு தருக.

(அ) சிலருரிமை அமைப்பின் சிறப்பியல்புகள்

(ஆ) குறையும் எல்லைப்பயன் விதி

(இ) உற்பத்திக் காரணிகள்

(ஈ) பதிலீட்டு விளைவு, வருமான விளைவு

(20 புள்ளிகள்)

**************